# 50 நாள் த.வெ.க ஆட்சி! திமிர்தான் இருக்குது..

# திறமையோ திராணியோ இல்லை!

**‘ஹனிமூன்’ காலம் என்ற பெயரில், தன் மீது விமர்சனங்களே வைக்கக்கூடாது என்று கதறும் முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க ஆட்சி 50 நாட்களைக் கடந்திருக்கிறது. கடந்த திராவிட மாடல் ஆட்சியில் இந்திய அளவில் உயர்ந்திருந்த தமிழ்நாட்டின் பெருமையை-, மாண்பை, சிதைத்து-சீரழித்திருப்பதுதான் த.வெ.க. அரசின் ‘சாதனை’யாக வெளிப்பட்டிருக்கிறது. சட்டங்களுக்கும் மரபுகளுக்கும் நாங்கள் அப்பாற்பட்டவர்கள் என்பது போல அடாவடித்தனமாக நடந்து கொள்வதை விஜய் தொடங்கி, அவருடைய அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள், கட்சி நிர்வாகிகள் என எல்லாரும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறார்கள்.**

பதவியேற்பு விழா மேடையிலேயே கண்ணியமற்ற முறையில், சினிமா பஞ்ச் வசனம் பேசி தன் தரத்தை வெளிப்படுத்திய விஜய், சட்டமன்றத்திலும் மனப்பாடம் செய்யப்பட்ட பஞ்ச் வசனங்களையும், அவை மரபுக்கு மாறான மோசமான செய்கைகளையும் செய்து காட்டினார். பொதுமக்களே முகம் சுளிக்கும் வகையில் அவரது நடவடிக்கைகள் இருந்தன. முதலமைச்சரை மிஞ்சிய நிழல் முதல்வரான ஆதவ் அர்ஜுனா, த.வெ.க கட்சிநிகழ்ச்சியில்பேசும்போது, சி.பி.ஐவிசாரணையில் உள்ள கரூர் விஜய் கூட்ட நெரிசல் உயிர்ப்பலிகள் தொடர்பாக அவதூறான குற்றச்சாட்டுகளை வாய் கூசாமல் பேசினார்.

**மரத்துக்கு மரம் தாவும் உயிரினம் போல பல கட்சிகள் தாவி, தற்போது அமைச்சராக இருக்கும் நிர்மல்குமார் வாயைத் திறந்தாலே பொய்தான் கொட்டுகிறது.**

**த.வெ.க அமைச்சர்களைப் பார்த்து சட்டமன்றத்தில் பேரவைத் தலைவரே, “நீங்கள் பேசுவது பொய். அப்படியெல்லாம் நடக்கவில்லை” என்று சொல்லக் கூடிய அளவில் வரம்பு மீறிய பேச்சுகளும், திமிர்த்தனமான தடித்த சொற்களும் த.வெ.க.வின் வெளிப்பாடாக உள்ளது. இப்படிப் பேசினால், அதை ரீல்ஸ்களாக வெட்டி, சமூக வலை தளங்களில் பரப்பி விடலாம் என்பதும், ஊடகங்களில் கவனத்தை ஈர்க்கும் என்பதைத் தவிர, வேறு எந்த உருப்படியான செயல்பாடுகளோ, பதவிக்குரிய பொறுப்புணர்ச்சியோ முதலமைச்சர் தொடங்கி த.வெ.க.வில் உள்ள யாரிடமும் இல்லை.**

திமிர்த்தனம் என்பதுதான் ஹீரோயிசம் என்கிற சினிமாத்தனமே 50 நாட்களைக் கடந்த த.வெ.க ஆட்சியில் வெளிப்பட்டுள்ளது. திறமையை வெளிப்படுத்தும் எந்த ஒரு செயல்பாடோ, துணிச்சலும் திராணியும் கொண்ட நடவடிக்கைகளோ ஒன்றுகூட கிடையாது. 50 நாட்களில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எத்தனை, அவை மக்களுக்கு என்ன பயனைத் தந்திருக்கின்றன என்பதற்கு பல்லை இளிக்கும் ‘சிங்கப் பெண்’ திட்டமும், ஷாக் அடிக்கும் மின்சாரக் கட்டணத்துடனான 200 யூனிட் திட்டமுமே சாட்சியாக உள்ளன. முந்தைய ஆட்சிகளில் வழங்கப்பட்ட 100 யூனிட் வரையிலான கட்டணமில்லா மின்சாரத்தின் போது பொதுமக்கள் செலுத்திய மின்சாரக் கட்டணத்தைவிட, இந்த 50 நாள் ஆட்சியின் 200 யூனிட் மின்சாரத் திட்டத்திற்குப் பிறகு, ஒவ்வொரு வீட்டிலும் செலுத்தப்படுகின்ற மின்கட்டணம் மிக அதிகமாக உயர்ந்துள்ளது.

**‘சிங்கப் பெண்’ திட்டத்தை சினிமா பாணியில் அறிமுகப்படுத்தினார் முதல்வர் விஜய். ஆனால், அந்த சிங்கத் திட்டத்திற்கு நகமும் கிடையாது, பற்களும் கிடையாது என்கிற அளவில்தான் அதிகார வரம்புகள் உள்ளன. திட்டத்தை அறிமுகப்படுத்திய பிறகும், தமிழ்நாட்டில் நாள்தோறும் பெண்கள் மீதும் சிறுமிகள் மீதும் பாலியல் வன்கொடுமைகள் தொடர்கின்றன. அதில் த.வெ.க. நிர்வாகிகள்தான் அதிகளவில் ஈடுபடுகிறார்கள் என்பதை ஊடகங்கள் வாயிலாகவும், காவல்துறை செய்திகள் வாயிலாகவும் அறிய முடிகிறது.**

த.வெ.க.வைச் சேர்ந்த பெண்மணி ஒருவரே, தனக்கு நடந்த பாலியல் கொடுமையில் த.வெ.க.வின் சட்டமன்ற உறுப்பினர் மீது வெளிப்படையாகப் புகார் தெரிவித்தும், சிங்கப்பெண்ணும் வரவில்லை. காவல்துறையும் நடவடிக்கை எடுக்கவில்லை.

போதைப்பொருளை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு ஓட்டத்தில் முதலமைச்சரே ஓடினார் என்று பெருமை பீற்றினார்கள். ஆனால், த.வெ.க அமைச்சரே பவுடர் பயன்படுத்தும் ‘ரீல்ஸ்’ வீடியோ வெளியாகி, வேலியே பயிரை மேயும் அபாயத்தை அம்பலப்படுத்தியது. **ஊழலும் லஞ்சமும் இல்லாத ஆட்சியைக் கொடுப்போம் என்று வீரவசனம் பேசியவர் விஜய். அரசு வழக்கறிஞர் பதவிக்காக அமைச்சர் முதல் ஆளுங்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் வரை லஞ்சம் வாங்கி வருவதை சொந்தக் கட்சி நிர்வாகியே அம்பலப்படுத்தியுள்ளார். மதுபான பார் தொடங்கி, கனிமவளம் வரை எல்லாவற்றிலும் லஞ்சமும் ஊழலும்தான் தலைவிரித்தாடுகிறது.**

திறமையற்ற நிர்வாகத்திற்கு இவையனைத்தும் சாட்சிகளாக இருக்கின்றன என்றால், இரக்கமற்ற அரசாக விஜய் ஆட்சி நடைபெறுகிறது என்பதற்கு, திருவள்ளூர் மாவட்டத்தில் அமோனியா வாயு கசிவில்

**கோவி.லெனின்**
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்



தற்போது வரை 18 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ள நிகழ்வு சாட்சியாக உள்ளது. முதல்வர் விஜய் இது குறித்து அக்கறை செலுத்தவுமில்லை. உரிய நடவடிக்கை எடுக்கவுமில்லை. கரூரில் தன்னைப் பார்ப்பதற்காக நீண்டநேரம் காத்திருந்த கூட்டத்தில், நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த போதே, அந்த இடத்தை விட்டு ஓட்டமெடுத்தவரிடம், இரக்கத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

**தி.மு.க.வினர் மீது பொய் வழக்குகளைப் போட்டு கைது செய்து சிறையில் அடைக்கத் துடிக்கும் அதிகாரத் திமிர் கொண்ட விஜய் அரசிடம், தமிழ்நாட்டின் நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் ஒன்றிய பா.ஜ.க அரசை நோக்கி குரல் கொடுக்கும் திராணியோ துணிச்சலோ துளியும் இல்லை. டெல்லிக்கு சலாம் அடித்து, குட்டிக்கரணம் போடும் முதுகெலும்பற்ற நிலையில்தான் விஜய் அரசு உள்ளது.**

சட்டமன்றத்தில் இரண்டு முறை தேசிய கீதம் பாடவேண்டும் என்று ஆளுநர் உத்தரவிட்டால், “அப்படியே செய்கிறோம் ஐயா” என்று சரணடைகிறார்கள். தமிழ்நாடு மும்மொழித் திட்டத்தை ஏற்காத நிலையில், ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் சி.பி.எஸ்.இ பள்ளிகளில் மூன்று மொழிகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. விஜய் அரசோ, தமிழ்நாட்டில் புதிதாக 1000 சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அனுமதியளித்து, மும்மொழித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு பின்வாசலைத் திறந்து விட்டுள்ளது.

மகாத்மா காந்தி பெயரில் இருந்த 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் பெயரை வி.பி.ஜி-ராம்-ஜி என்று மோடி அரசு மாற்றியதுடன், இத்திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்களிப்பைக் குறைத்துவிட்டு, மாநில அரசின் நிதிப்பங்களிப்பை அதிகமாக்கியிருப்பதால், கடும் நிதிச்சுமையை மாநிலங்கள் சந்திக்க வேண்டியுள்ளன. அதனால்தான், திராவிட மாடல் அரசு இத்திட்டத்தை ஏற்க முடியாது என சட்டமன்றத்தில் முடிவெடுத்தது. அந்த முடிவுக்கு மாறாக, **தமிழ்நாடு அரசுக்கு நிதிச்சுமையை ஏற்படுத்தும் புதிய 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு, “நாங்கள் உங்கள் அடிமைதான்” என்று ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு சிக்னல் தந்திருக்கிறது த.வெ.க அரசு.**

நியமனப் பதவியில் உள்ள ஆளுநர், அதுவும் பொறுப்பு ஆளுநராக இருக்கும் அர்லேகர் மதுரையில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, “வைகை ஆற்றை ஆளுநர் மாளிகையே சுத்தம் செய்யும்” என்கிறார். **மாநில அரசின் அதிகாரத்தைப் பறிக்கும் வகையிலான ஆளுநரின் இந்த அத்துமீறிய செயல்பாட்டை எதிர்த்து, ‘பஞ்ச்’ டயலாக் பேசும் துணிச்சல்கூட விஜய்க்கு இல்லை. 50 நாட்களிலேயே ‘ஃப்ளாப்’ ஆகியிருக்கிறது த.வெ.க ஆட்சி எனும் காட்சி.**

---

### கரூரில் 41 பேர் பலி! சி.பி.ஐ. வழக்கு:

# அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கதறல்!

## அரசு வேலை வழங்கி சமாதானப்படுத்த முயற்சி!

சேலம், ஜூலை. 5-

கரூரில் 41 பேர் உயிரிழந்த வழக்கில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மீதான சிபிஐ பிடி இறுகுவதால் அவர் கதற தொடங்கியுள்ள நிலையில், 41 பேரின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கி சமாதானப்படுத்த முதல்வர் முயற்சி மேற்கொண்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் சட்டமன்ற தேர்தலையொட்டி கரூரில் பிரசாரத்திற்கு சென்றார். இரவு 7 மணியில் இருந்து 10 மணி வரை பொதுக்கூட்டம் நடத்துவதாக போலீசாரிடம் அனுமதி வாங்கிவிட்டு, காலை 12 மணிக்கு விஜய் வருகிறார் என த.வெ.க. சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனை நம்பி ஏராளமான ரசிகர்கள் விஜய்யை பார்ப்பதற்காக காத்திருந்தனர். அவர்களுக்கு அங்கு குடிதண்ணீர் வசதி கூட செய்து கொடுக்கவில்லை. காலை 11 மணியில் இருந்து இரவு 7 மணி வரை இருந்த ரசிகர்களால் பசி தாங்க முடியாத நிலை ஏற்பட்டது. இரவு 7.15 மணியளவில் நடிகர் விஜய் அங்கு வந்தார். கட்டுக்கடங்காத கூட்டம் இருந்த நிலையில், நடிகர் விஜய்யை நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு வராமல் சற்றுதூரத்திலேயே இருந்து பேசுமாறு போலீஸ் அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

ஆனால் குறிப்பிட்ட இடத்தில் தான் எனது வாகனம் நிற்கும் என விஜய் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அப்போது விஜய் பேச ஆரம்பிக்கும் போது கூட்ட நெரிசலில் ரசிகர்கள் சிக்கிக்கொண்டனர். போலீஸ் அதிகாரிகளின் பேச்சை மீறி உள்ளே வந்த நிலையில் ஏற்கனவே பசியால் வாடிக்கொண்டிருந்த ரசிகர்கள் கூட்ட நெரிசலில் சிக்கினர். இதில் 41 பேர் உடல் நசுங்கி பலியாகினர். ஆனால் நடிகர் விஜய், அங்கிருந்து உடனடியாக சென்னைக்கு புறப்பட்டு சென்றுவிட்டார்.

இந்த துயர சம்பவத்தை கேள்விப்பட்ட அன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னையில் இருந்து கரூருக்கு வந்து ஆறுதல் தெரிவித்தார். இதுதொடர்பாக தற்போது அமைச்சர்களாக இருக்கும் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட சிலர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. தற்போது சிபிஐ அதிகாரிகள் விசாரணையை துரிதப்படுத்தி யுள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமையில் அதிமுகவினர் இணைப்பு விழாவில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, “கரூரில் எங்களுக்கு ஒரு கணக்கு பாக்கி இருக்கிறது. அதை முடிக்காமல் ஓய மாட்டோம். எங்கள் மக்களை காவல்துறை மூலம் கொன்று குவித்ததற்கு பதிலடி கொடுப்போம்” என்றார். இந்த பேச்சுமூலம் சம்பவத்தை திசை திருப்ப அவர் முயற்சி செய்கிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கரூர் கூட்டத்தை ஏற்பாடு செய்த மாவட்ட செயலாளர், ஆதவ் அர்ஜுனா, புஸ்ஸி ஆனந்த், நடிகர் விஜய் ஆகியோர் மீது சிபிஐ பிடி இறுகி வருவதாக கூறப்படுகிறது. இதன் காரணமாகத்தான் ஆதவ் அர்ஜுனா கதறி வருவதாகவும் சொல்லப்படுகிறது.

கரூரில் போலீஸ் அதிகாரிகள் தடுத்தும் அதை கேட்காத காரணத்தினால் தான் இந்த துயர சம்பவம் நடந்திருப்பதும் சிபிஐ விசாரணையில் தெளிவாக தெரியவந்துள்ளது. தங்கள் மீது நெகட்டிவான ரிப்போர்ட் சிபிஐயிடம் இருப்பதால் அதனை திசை திருப்பும் வகையில் ஆதவ் அர்ஜுனா பேச்சு அமைந்துள்ளதாக கூறப்படுகிறது. சிபிஐ விசாரணை வேகமெடுக்கும் நிலையில் 41 பேரின் குடும்பத்தினரும் தன் மீது கோபப்பட்டு விட கூடாது என்பதற்காக அரசு சார்பில் வேலை வழங்குவதற்கு முதல்வர் விஜய் நடவடிக்கை எடுத்து வருவதாக சொல்லப்படுகிறது. தங்கள் மீதான குற்றத்தை மடைமாற்றம் செய்வதற்கான திட்டமாக ஆதவ் அர்ஜுனா பேச்சு கருதப்படுகிறது.

இதுபற்றி அதிமுகவினர் கூறுகையில், “41 பேர் பலியான சம்பவத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மருத்துவமனைக்கு சென்று ஆறுதல் கூறினார். தற்போது அவர் த.வெ.க.வில் இணைந்து இருக்கிறார். நடந்த சம்பவம் யாரால் எப்படி நடந்தது என விஜயபாஸ்கருக்கும் தெரியும். ஆனால் அவரை த.வெ.க.வில் சேர்த்து தங்களுக்கு ஆதரவாக பேசுவார் என ஆதவ் அர்ஜுனா கூறி வருகிறார். போலீசாரின் அறிவுரையை கேட்காமல் இந்த கூட்டத்தை நடத்திய காரணத்தால் தான் இந்த கொடிய சம்பவம் நடந்தது. மக்களை ஏமாற்றுவதற்காகவே ஆதவ் அர்ஜுனா பேசி வருகிறார்,” என்றனர்.

---

# சாதிய அட்டை: முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன் கண்டனம்!

நாகர்கோவில், ஜூலை.5-

பள்ளி மாணவ ,மாணவியருக்கு சாதியை உள்ளடக்கிய அடையாள அட்டை தொடர்பாக முன்னாள் அமைச்சர் என். சுரேஷ்ராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையாவது:-

சமத்துவம் , பகுத்தறிவு , சமூகநீதி கொள்கையை கொண்ட தமிழ்நாட்டில் இவை அத்தனையும் ஓங்கி நிற்கும் அரசு பள்ளிகளில் மாணவ, மாணவிகளிடையே பிரிவினை கலாச்சாரத்தை ஏற்படுத்த



முயற்சி செய்யும் வகையில் சாதியை உள்ளடக்கிய அடையாள அட்டை பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் என்று அறிவித்துள்ள அமைச்சர் செங்கோட்டையன் செயலை வன்மையாக கண்டிக்கிறேன்.

பிஞ்சு மனதில் நஞ்சை புகுத்தி மதவாதிகளுக்கும் , சாதியவாதிகளுக்கும் வருங்கால தலைமுறைகளை அடமானம் வைக்க நினைக்கும் இந்த சோபா மாடல் ஆட்சி பாசிசவாதிகளுக்கு துணை போகும் செயலாகவே தன்னை மறைமுகமாக காட்டிக் கொள்ள நினைக்கிறது என்றே இதை பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

மத, சாதி எனும் போதைக்கு தமிழ்நாட்டு மக்களை யார் அடிமையாக்க நினைத்தாலும் திராவிடக் கொள்கை முன்னின்று போராடும் , வெல்லும்.

எனவே இப்படியான செயலை தமிழ்நாட்டு பள்ளிகளில் முன்னெடுப்பதை அனுமதிக்க வேண்டாம் என இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### வாணியம்பாடியில் கடந்த ஆண்டு காரில் சென்று

# ஆடு திருடிய வழக்கில் சிக்கியவருக்கு - அரசு முதன்மை வழக்கறிஞர் பதவி!

திருப்பத்தூர், ஜூலை 5-

வாணியம்பாடியில் கடந்த ஆண்டு காரில் சென்று ஆடு திருடிய வழக்கில் தொடர்புடையவருக்கு அரசு வழக்கறிஞர் பதவி வழங்கப்பட்டுள்ளது வழக்கறிஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. திருப்பத் தூர் மாவட்டம் வாணியம்பாடி புதூர் ஏரிக்கரை பகுதியை சேர்ந்தவர் அஞ்சலா, கணவனை இழந்தவர். இவர் வாழ்வாதாரத்திற்காக ஆடுகளை வளர்த்து பிழைப்பு நடத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், அஞ்சலா வளர்த்து வந்த ஆடுகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளதாக தெரிகிறது. இதுதொடர்பாக அவர் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில், தான் வளர்த்து வந்த ஆடுகளை காணவில்லை என்று புகார் அளித்தார். அதன் பேரில், போலீசார் வழக்கு பதிந்து, அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அப்போது, வாணியம்பாடி அம்பலால் நகர் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஷேக் சுல்தான் என்பவர், திருமலை என்பவருடன் சேர்ந்து, காரில் அஞ்சலாவின் ஆடுகளை திருடிச் சென்றது தெரியவந்தது. இதையடுத்து வாணியம்பாடி நகர போலீசார், வழக்கறிஞர் சுல்தான், திருமலை ஆகிய 2 பேர் மீதும் வழக்கு பதிவு செய்தனர்.

இந்நிலையில் ஆடு திருடியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள, வழக்கறிஞர் ஷேக் சுல்தான், திருப்பத்தூர் நீதி மன்றத்தில், தமிழக அரசு சார்பில், சிவில் வழக்குகள் தொடர்பாக அரசு தரப்பில் வழக்காடுவதற்காக, முதன்மை அரசு வழக்கறிஞராக நியமிக்கப் பட்டுள்ளார். இந்த சம்பவம் வழக்கறிஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கறிஞர் ஷேக் சுல்தான் மற்றும் திருமலை ஆகியோர் மீதான வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் இந்த வழக்கு தொடர்பாக வருகிற 22ம் தேதி வழக்கறிஞரை நீதிமன்றத்தில் ஆஜராக நீதிமன்றத்தின் சார்பில் சம்மன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆடு திருடிய வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், தற்போது திருப்பத்தூர் மாவட்ட அரசு அமர்வு நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் அரசு தரப்பு வழக்கறிஞராக, வழக்கறிஞர் ஷேக் சுல்தான் நியமிக்கப் பட்டுள்ளார். இது திருப்பத்தூர் நீதிமன்ற வட்டாரத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

**குற்றப்பின்னணி உள்ளவரை நியமிப்பதா?**

சமுதாயத்தில் குற்றச் செயலில் ஈடுபட்ட தாக, குற்றம் சாட்டப்பட்ட நபர்களை நீதிபதியின் தீர்ப்புக்கு முன்னர் நீதி மன்றத்தில் குறுக்கு விசாரணை மேற்கொளளும் பொறுப்புள்ள பணியை மேற்கொள்பவர்கள் வழக்கறிஞர்கள். சட்டம் ஒழுங்கை பாதுகாக்க அமைக்கப்பட்ட மேன்மையான பணியை மேற்கொள்பவர்கள் வழக்கறிஞர்கள். இத்தகைய வழக்கறிஞர் பணியை அரசு தரப்பில் வாதாட பணி ஆணை வழங்கப்படும்போது அதை சார்ந்த வழக்கறிஞரின் குற்ற பின்னணியை சரியாக விசாரணை மேற்கொண்டு அரசு தரப்பில் பணி ஆணை வழங்கப்பட வேண்டும் எனவும் இல்லையேல் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகும் என்றும் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.